7-10-2007

நாகர்கோவில் ரோட்டரி மையக்கட்டிடத்தில் வைத்து,

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு

குமரிமாவட்ட நேரு இளையோர்மையம்

நடத்திய

# வன்முறைக்கு எதிராக இளைஞர் மாநாடு





உரை:

## முள்ளஞ்சேரி.மு.வேலையன்

(அமைப்பாளர், குமரி அறிவியல் பேரவை )

# அன்று சிந்திய அகிம்சை குருதி

உகா என்ற தாழ்ந்த குலமாகக் கருதப்படும் மனிதன் என்ன நிலையில் இருந்திருப்பான்? தன்னை சரிசமமாக மதிக்கவில்லையே! என்னை தொட்டுவிட்டால் ஏன் குளிக்கிறார்கள் ? எனக்கு ஏன் இப்படி உணவு தரப்படுகிறது? ஏன் எல்லாவற்றையும் தொட உரிமையில்லை? என்ற கேள்வியோடு வாழவில்லை. இதுதான் பெரும்பான்மையான இந்தியர்களின் நிலைமை.

காந்தியின் பெற்றோர் கொடுமைக்காரர்களாகவும் இல்லை, மற்றவர்களைத் துன்புறுத்தும் நோக்கமும் இல்லை. நீதிநெறி வழுவக் கூடியவர்களும் இல்லை. ஆனால் காலம் காலமாக இருந்த சமூகப்பழக்கமாக தனது தேவைகளை நிறைவேற்றக் கூடிய வசதிக்காக ஏற்படுத்திய முறை மனிதனை அடிமைப் படுத்தியமுறை.

பால்கொடுக்கும் மாட்டைக் கழுவி, சீராட்டி, உணவிட்டு பராமரிப்பார்கள், சிலர் அடித்துத் துன்புறுத்துவார்கள். இதுபோல் தான் சமூகப் பழக்கமும், இதுதான் இந்தியாவின் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி கொடுமைகள்.

சதி என்ற உடன்கட்டையை ஏற்கும் பெண்களும் வாழ்ந்தார்கள். விரும்பாதவரை விட்டுவிடாமல் சிதையில் கட்டிப்போடும் கொடுமையும் வாழ்ந்தது.

உழைத்த காசுகளை வீடு சேர்க்காமல் கள்ளுக்கடையில் குடித்துத் குடித்துப் பாழ்படுத்தும் நிலைமையும். பெண்ணைப் போகப் பொருளாக மட்டும் பாவித்து பூ வைத்துப் பொட்டு வைத்து கணவனைச் சேவிக்க மட்டும் விட்டு வைத்து, உள்ளமற்ற, உணர்வற்ற நிலையாய் வாழவிட்ட நிலை.

மதத்துக்கு மதம் சண்டையிட்டுக் கெட்ட போர் புரிந்து, மனிதநேயம் அற்று வேற்றானை வெந்தணலில் போட்டும், கழுகுமரத்தில் ஏற்றியும், வெட்டிச் சாய்த்து, சாதித்துக் கொள்ளும் நிலைகள்.

இவைகளுக்கு இடையில் தான் பாரதம். ஊருக்கு ஊர் நாட்டாமையும் நிலத்துக்கு நிலம் குறுநில மன்னர்களும் குற்றேவல் புரிய அடியாட்களும் கெட்ட போரிட்டு வாழ்ந்த நிலையில் மக்கள். உணவுக்கும்

மருந்துக்கும் குடிக்க நீருக்கும் சிரமப்பட்டுக் குற்றுயிர் ஆனது தான் பாமரன் நிலை.

இந்த நிலையில் பன்னெடுங்காலமாகக் கல்வி பயின்று நவீன ஆயுதங்களைக் கொண்டு உலவி வருபவனால் நாட்டை ஆளும் திறன் பெற ஒன்றும் கடினமானது இல்லை. பிடிக்காதவர்கள் பிடித்தவர்கள் அத்தனை பேரையும் கையில் போட்டுக் கொண்டார்கள்.

கனிம வளங்கள் இயற்கை தந்த அருட்கொடைகள் அவனுக்குத் தேவைப்பட்டது. அணை கட்டினான் தங்கம் போல் நெல் விளைந்தது அதைக்கப்பமாகப் பெற்றான்.

நாகரிக உடைகளைத் தயாரித்து வந்து வியாபாரக் கூடமாக்கினான். பொன்னும் மணியும் கோமேதகமும் பறித்தெடுத்தான். போக்குவரத்திற்கு ரயில் பாதை அமைத்தான் தகவல் தொழில் நுட்பம் அறிந்திருந்ததால் தொலைபேசி, தந்தி கொண்டு வந்து நிர்வாக முறை வலுப்படுத்த ஆங்கிலக் கல்வி கொடுத்தான்.

இவையெல்லாம் அவன் சுயநலத்திற்காகச் செய்தான். வரி கொடுக்க மறுத்தவர்களைத் தமது படைபலத்தால் மண்டியிட வைத்தான். வாழ் விழந்தவர்களில் சிலா் எதிர்த்து நின்றார்கள். அதுவே ஆங்கிலேயரை எதிர்த்து நிற்கும் போராகியது.

புலித்தேவன், கட்டபொம்மன், மருது சகோதரர்கள், ஜான்சிராணி, ஹைதர்அலி போன்ற சில நூறு பேர் தனித்து நின்று வீரம் காட்டினால் அசுரபலம் கொண்டோனுக்கு அடக்குவது எளிமை, அடங்கி ஒடுங்கிப்போனது நாடு.

1885 இந்திய தேசியக் காங்கிரஸ் நாட்டு மக்கள் தேவைகளை கேட்டுப் பெறும் அமைப்பாகத் தோன்றியது பின்னர் மிதவாதிகள், தீவிரவாதிகள் என வளர்ந்து அவர்கள் சிந்தனை முறையில் போரட்டம் நடத்தினார்கள்.

இந்திய மக்கள் முழுமையும் பங்கு பெறாததால் இந்தியா விடுதலை என்ற நிலைபெறும் சக்தி பெறவில்லை.

இந்தியாவில் பல சமூகத்தவரின் மேலைநாட்டுக் கல்வியும் அங்கு அவர்களுக்குக் கிடைத்த இழுக்கு நிலையும் தான் அவர்களை சிந்திக்க வைத்தது.

அதில் மோகன்தாஸ் கரம் சந்த் காந்தியும் ஒருவா் தான் தனக்கு ஏற்பட்ட நிகழ்வை போல் பாமரக் குடிகள் தினம் அனுபவித்து வருகிறாா்கள் என்ற ‘நச்’ என்ற உணா்வுதான் தென்னாப்பிரிக்கா இந்தியா்களின் உரிமைக்கான போராட்டம், அதில் அண்ணல் பெற்ற பயிற்சிதான் இந்தியாவில் எழுந்த மக்கள் பேுராட்டத்தின் தொடக்கம்.

காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்தபோது திலகா் போன்ற மாபெரும் விடுதலை வீரா்களைத்தான் முதலில் சந்தித்தாா். அவா்களோடு இணைந்துதான் பணியாற்றினாா். மக்கள் பங்கேற்காத போா்கள் சரியான தீா்வு கிடைக்காது. இந்தியாவை சுற்றிப் பாா்த்து மக்கள் வாழ்வியல் தளங்களை கண்டு கொள்வதே சரியாக இருக்கும் என உணாந்து இந்தியா எங்கும் சுற்றுப்பயணம் செய்தாா் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி.

மதுரை விவசாயியின் அரை ஆடைக்கோலம் தன்னை நிலைநிறுத்தும் அடையாளமாக தோன்றியது. இந்திய நாட்டின் பெரும்பாலான மக்களுக்கு மாற்று உடை இல்லை. நாமும் அதுபோல் வாழ்ந்து அடையாள படுத்திக் கொள்ள வேண்டும். என முடிவு செய்தாா். அந்த அடையாளம் தான் காந்தியின் சுதந்திரப் போரில் முதல் வெற்றி.

இந்திய மக்களின் தேவைகளை அவாகளே நிவா்த்தி செய்வதில்லை. மனித உழைப்புகள் பாழ்பட்டுப் போய் கொண்டிருக்கின்றன. அவா்களுக்கு தொழிலும் வருவாயும் ஈட்டிக்கொடுக்க இராட்டினத்தைக் கொண்டு ஈடு செய்ய முனைந்தாா். தானும் தனது தேவைகளுக்காக இராட்டினத்தில் நூற்ற துணியை உடுத்தாா். இந்தக் கதா் இயக்கம் போராட்டக் களமாக மாறியது.

உப்புக்கு வரி என்பது ஏழை மக்களை உறுத்தும் திட்டம் உணவில் கை வைக்கும் போது உணா்ந்து எழுவாா்கள் என்பதை உணா்ந்து,

சபர்மதி முதல் தண்டி வரை பயணம் செய்து இயற்கையாய்க் கிடைக்கும் உப்பை அள்ளி தடையை மீறினார். இதுபோல் இந்தியா எங்கும் எழுச்சி பெற்ற போர் யுக்தியானது.

கை இராட்டினத்தால் செய்த துணியை விடப் பகட்டான மேல்நாட்டுத் துணியைத் தான் மக்கள் நாடுவார்கள் என்பது இயல்பான நிகழ்வு, அன்னிய துணிகள் பகிஷ்கரிப்பு முறையை கொண்டு வந்து போராட்டக் களமாக்கி வெற்றி கண்டார்.

உழைத்த பணம் எல்லாம் கள், சாராயத்திற்காகக் செலவிடுகிறார்கள். இதனால் உழைப்பற்று வறுமை மிஞ்சுகிறது. இதற்கு எதிராகக் கள்ளுக்கடை மறியலுக்காகப் பெண்களைத் தட்டி எழுப்பி பெண்கள் சக்தியைத்திரட்டி போர்க்களம் அமைத்தார். நாட்டின் மூலை முடுக்குகளிலும் சேரிகள் எங்கும் சுகாதாரக்கேடு, மக்கள் தொற்று நோய்களால் செத்து மடிகிறார்கள். தீர்வு காண சுகாதாரத் தூய்மைப்பணி. தொண்டுக்கென்றே தயார் படுத்துகின்ற இளைஞர் கூட்டம். மக்கள் சேவைக்கென்றே வாழுகின்ற மகளிர் கூட்டம். சபர்மதி போன்று கணக்கற்ற ஆசிரமங்கள் தூய்மைப்பணி, தீண்டாமை ஒழிப்பு, ஆதாரக்கல்வி, தொழில்கள் , மருத்துவ சேவை, எளிய வாழ்க்கை, சத்தான உணவு முதலியவைகளால் ஆரோக்கிய வாழ்வுக்கு மக்களுக்கு உணர்த்திய இயக்கம், காந்தியின் இயக்கம்.

அன்னியனை எதிர்க்கும் போது மட்டுமல்லாமல் மக்கள் ஒருவரையொருவர் உரையாடும் போதும், பழகும் போதும், பேசும் போதும் , ஏன் எண்ணும் போதும் கூட அகிம்சையைக் கடைப்பிடிக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டது.

சர்வோதயம் என்ற சொல், சத்தியம் என்ற மொழி, அகிம்சை என்ற ஆயுதம் இவைகள் வழக்கில் இருந்தவையென்றாலும் வாழ்வியலில் கடைப்பிடிக்கக் வேண்டியதுதான், காந்தியப் போராட்டம்.

இடைவிடாது அச்சுறுத்திய மதவெறி என்னும் பேயை விரட்டி நல்லுறவு ஏற்படுத்த வேண்டும். காந்தியம் வென்றெடுக்க முடியாத போராட்டம். மத நல்லுறவுப் போராட்டமாகத்தான் இருந்தது இப்படி உள்ளுக்குள் இடைவிடாது

போராடியதன் வளர்ச்சிதான் வெள்ளைக்காரனை எதிர்த்து நடைபெற்ற போர்கள்.

சத்தியாக்கிரகம், உண்ணாநோன்பு, ஒத்துழையாமைப்போர் இவையெல்லாம் காந்தி வகுத்த போர்முறைகள், ஒருவர் பதவி துறப்பது இழப்பு, ஒட்டுமொத்த மக்களும் துறப்பது மறப்போராக மாறியது. மக்கள் மனங்களில் தியாகம் தொண்டு சகிப்புத்தன்மை அன்பு, அமைதி, நல்லுறவு முதலியவை வாழ்வியல் ஆதாரமாகக் கொண்டு போரிட்டதால் மிகப்பெரிய பீரங்கிகள் வெடிக்கத் தயங்கின. விண்ணில் பறந்த விமானங்கள் குண்டு வீசாமல் இருந்தன. ஏந்திய துப்பாக்கிகள் நடுங்கின. அவர் உயிரைப் பதம் பார்த்த துப்பாக்கியும் பாதம் பணிந்து மண்டியிட்டு வரமாய் பெற்றுதான் மார்பைத் துளைத்தன. அன்று சிந்திய அகிம்சை குருதி இன்று உலகெங்கும் பாதகங்களை கழுவக் முனைகிறது. வன்முறைப் போர்களுக்கு முடிவுரை எழுத முகவரி வழங்கிக் கொண்டிருக்கிறது.

**முள்ளஞ்சேரி.மு.வேலையன்**